1982 மார்ச் 16]

தஞ்சை மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடங்கள்.

*வினா எண். 493—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மண்டல போக்குவரத்து அலுவலரிடம் 1979–80, 1980–81ம் ஆண்டிற்கு புதிய பேருந்து வழித்தடம் கேட்டுவந்த மனுக்கள் எத்தனை?

(ஆ) அனுமதி வழங்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை?

(இ) வழங்கப்பட்ட வழித்தடங்களில் எத்தனைப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

	1979—80	1980—81
(அ) புதிய பேருந்து வழித்தடம் கேட்டு வந்த மனுக்கள்.	185	300
(ஆ) அனுமதி வழங்கப்பட்ட வழித்தடங்கள்.	90	18
(இ) அனுமதி வழங்கப்பட்ட வழித் தடங்களில் ஓடும் பேருந்துகள்.	82	13

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தலைவர் அவர்களே விண்ணப்பிக்கப்பட்டதற்கு பெர்மிட் வழங்கியதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இவைகள் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு அளிக்கப்பட்ட பெர்மிட்டுகளா? அல்லது தனியார்களுக்கு அளிக்கப்பட்டவையா? ஏற்கனவே புதிய மார்க்கங்கள் வழங்குவதை நிறுத்தி வைத்திருந்தது. அது இப்போது நீக்கப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு தான் வழங்கப்பட்டிருக்கிறது. தனியார்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆய்ந்து கொண்டிருக்கிறோமே தவிர அந்த தடை இன்னும் நீக்கப்படவில்லை.

வாடகைக் கட்டிடங்களில் உள்ள அரசு அலுவலகங்களை சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்றும் செயற்குறிப்பு.

* வினா எண். 494—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாடகைக் கட்டிடங்களில் உள்ள பல்வேறு அரசு அலுவலகங்களை சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்றும் முயற்சியாக 1980-81-ல் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : வாடகைக் கட்டிடங்களில் உள்ள பல்வேறு அரசு அலுவலகங்களை சொந்தக் கட்டிடங்களுக்கு மாற்றும் பொருட்டு அரசு 1980-81ல் கீழ்க் கண்ட அலுவலக கட்டிடங்களை கட்ட அனுமதி வழங்கியுள்ளது:

(1) புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பெரியார் மாவட்டத் தின் அரசு அலுவலகங்களுக்குத் தேவையான கட்டிடங்கள் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 327·05 இலட்சங்கள்);

(2) திருநெல்வேலியில் கோட்டாட்சியர் அலுவலக கட்டிடம் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 5·35 இலட்சங்கள்) ;

(3) விருதுநகர், பெரம்பூர் (சென்னை) ஆகிய இடங்களில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்கள் மதிப்பீட்டுத் தொகை ரூ. 10·65 இலட்சங்கள்) ;

(4) கரூர், தேனி ஆகிய இடங்களில் வணிக வரித்துறை அலுவலகக் கட்டிடங்கள் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.60 இலட்சங்கள்) ; மற்றும்

(5) கடலூர், விருத்தாசலம், மதுரை ஆகிய இடங்களில் பொதுப் பணித்துறைக்கு தேவையான அலுவலகக் கட்டிடங்கள் (மதிப்பீட்டுத் தொகை ரூ. 7·05 இலட்சங்கள்).

திரு. என். எஸ். வி. சித்தன் : இப்படி வாடகைக் கட்டிடங் களிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசு அலுவலகங்களுக்காக அரசு ஆண்டுக்கு என்ன வாடகை கொடுக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ? வாடகை நாள்தோறும் உயர்ந்து கொண்டி ருக்கின்ற காரணத்தினால் இதை ஒரு 'பேஸ்ட் புராகிராமாக' திட்டமிட்டமுறையில் அமல்படுத்தி எல்லா அலுவலகங்களையும் அரசு கட்டடத்திலே அமைக்க, தொலைதூர நோக்கோடு ஏற் படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, வாடகை சம்பந்தப்பட்டது பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்டதல்ல. அரசு அலுவலகங்கள் கட்டுவதற்கு ஒவ்வொரு ஆண்டும் உத்திரவு பிறப்பித்து புதிய புதிய அலுவலகக் கட்டிடங்களை பொதுப் பணித் துறையின் வாயிலாகக் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, பெரம்பூர் பகுதி யிலே, அரசு அலுவலகம் கட்டப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டி ருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : பெரம்பூரில் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அதன் மதிப்பீட்டுத் தொகை 5 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் என்று கருதுகிறேன்.